**பாணந்துறை பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாணந்துறை பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பாணந்துறை பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படாதிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | | |
| (அ) ஆண்டில் ஆதனங்கள் மற்றும் பொறிகள் கொள்வனவு செய்தல் பெறுமதி ரூபா 20,250,348 ஆக இருந்த போதும், காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா | முதற்தடவையாக கணக்குகள் தயாரிக்கப்பட்டமையால் ஏற்பட்ட குறைபாடாக இருந்தமை எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | சரியாக கணக்குகளில் சீராக்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 14,328,848 ஆக காண்பிக்கப்பட்டமையால் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 5,921,500 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் ரூபா 65,632,283 ஆக இருந்த போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 53,130,866 ஆக காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் ஆரம்ப காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் ரூபா 12,501,417 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது நிலையான வைப்பு வட்டி வருமானம் ஆண்டின் செயற்பாட்டு வருமானத்தில் குறைத்து அந்த பெறுமதி முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) ஆண்டில் காசு மற்றும் காசுக்குச் சமமாவைகளில் தேறிய குறைவு ரூபா 12,501,417 ஆக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 9,749,094 ஆக ரூபா 2,752,323 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உள்ளுராட்சித் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 11,934,000 தொகையான கம்பெக்டர் வாகனத்தின் | ஏற்பட்ட தவறு சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி ரூபா 279,000 குறைத்து மூலதனமாக்கப்பட்டமையால் நிலையான சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டில் கட்டிட நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி விடயங்கள் 04 இன் கிரயமான ரூபா 2,625,005 காணி மற்றும் கட்டிடமாக மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | நாட்குறிப்பு இலக்கம் 24 இன் மூலம் வேலைக் கடன்கொடுத்தோர் இறுதி மீதியின் பெறுமதி ரூபா 18,749,336 தொகை செலவினக் கட்டுப்பாட்டு கணக்கில் வரவில் கணக்கீடு செய்யப்பட்டமையால் அப்பெறுமதியால் செலவினக் கட்டுப்பாட்டு கணக்கு அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | நாட்குறிப்பு இலக்கம் 33 இன் மூலம் முன்னைய ஆண்டில் பொதுக் களஞ்சிய பற்றாக்குறை சீராக்கம் ரூபா 5,487,834 தொகையை பேரேட்டில் பதியும் போது பொதுக் களஞ்சிய கணக்கில் செலவிலும், பற்றாக்குறை மிகைக் கணக்கில் வரவிலும் பிழையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | நாட்குறிப்பு இலக்கம் 34 இன் மூலம் முன்னைய ஆண்டின் மின்சார களஞ்சிய இருப்பு ரூபா 398,000 அதிகரித்து பதியப்பட்டதை சரிசெய்யும் போது மின்சார களஞ்சிய கணக்கு செலவு வைக்கப்பட்ட போதிலும் பற்றாக்குறை மிகைக் கணக்கு ரூபா 398,000 வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர் மூன்று பேர்களின் சம்பளமற்ற விடுமுறைக்காக | ஒரு ஊழியரிடமிருந்து இதுவரையிலும் ரூபா 4,661 தொகை | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிடைக்க வேண்டிய ரூபா 108,588 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட்டுள்ளதுடன் ஊழியர்கள் இருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 103,929 தொகையை ஊழியர் பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர் கடன் மீதி ரூபா 32,615,460 ஆக இருந்த போதிலும் ஆண்டில் வழங்கப்பட்ட கடன் தொகையான ரூபா 10,385,442 மாத்திரம் நிதிக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டின் இறுதியில் 02 ஆயுர்வேத மருந்தகங்களின் எஞ்சிய இருப்பின் பெறுமதி ரூபா 46,200 நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது. | தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஐ) | மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 75,000,000 மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,000,000 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (ஒ) | பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 81,965,809 தொகையான வேலைக் கடன்பட்டோர் மற்றும் ரூபா 18,749,336 தொகையான வேலைக் கடன்கொடுத்தோர் என்பன நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | இவ்வாறான தவறு எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான வட்டி வருமானம் ரூபா 450,459 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்பட்ட தவறு சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான வைப்பு பெறுமதி ரூபா 1,761,576 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்பட்ட தவறு சரிசெய்யப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (க) | முன்னைய ஆண்டிற்காக கிடைத்த ஊழியர் கடன் வட்டி ரூபா 700,388 மீளாய்வாண்டின் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான தகவல்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (கா) | சேவை உடன்படிக்கைக்காக எதிர்வரும் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 105,732 மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்பட்ட தவறு சரிசெய்யப்படும். | - மேற்படி - |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 24 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிக்கும் அதற்கு நேரொத்த அறிக்கைகளில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிக்கும் இடையே ரூபா 261,113,475 வேறுபாடு காணப்பட்டது. | 2021 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | வேறுபாட்டினை இனங்கண்டு கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 29,679,395 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 51,036,602 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ஒட்டுமொத்த நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய நிலுவை ஆதனவரி மீதி 32,229,568 ஆக இருந்த போதும், நிதிக்கூற்றுக்களில் நிலுவை ஆதனவரி மீதியாக ரூபா 40,186,581 காண்பிக்கப்பட்டிருந்தது. | உள்ளபடியான மீதி ரூபா 40.186,561 ஆக இருந்ததுடன் உப அலுவலகங்களிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிழையானமையால் அவ்வாறு ஏற்பட்டிருந்தது. சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சரியான மீதி பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விளையாட்டு மைதானமாக அபிவிருத்தி செய்யும் நோக்கில் முதியோர் இல்லத்திற்குரிய 16 ஏக்கர் பரப்பளவுடைய வயல் காணியொன்றை கைப்பற்றுவதற்காக ரூபா 2,518,750 தொகை 2020 யூன் 26 ஆந் திகதி பாணந்துறை பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்தக் காணி உரித்துறுதி இலக்கம் 14562 இன் கீழ் 2004 யூலை 23 ஆந் திகதி தனியார் ஒருவரால் அவரின் உணவுத்தேவையை பூர்த்தி செய்வதற்காக முதியோர் இல்லத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது. எதிர்பார்த்த நோக்கங்களுக்கு புறம்பாக விளையாட்டு மைதானமொன்றை அமைப்பதற்காக பிரதேச சபையினால் காணியை கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் இந்த வயல் காணிக்காக பணம் வைப்புச் செய்வதற்கு முன் சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அதன் கிரய மதிப்பீடும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்காக சபையின் வேலை அத்தியட்சகரின் பரிந்துரை பெறப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்வதற்கு தேவையான பரிந்துரைகள் உரிய நிறுவனங்களிலிருந்து பெற்று காணி அமைச்சின் அங்கீகாரத்திற்காகவும் அனுப்பப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது சாத்தியவள ஆய்வு மற்றும் கிரய மதிப்பீடு என்பன தயாரிக்கப்படும். | சாத்தியவள ஆய்வு மற்றும் கிரய மதிப்பீடு தயாரித்ததன் பின்னர் கொள்வனவு வேலைகளை ஆரம்பித்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாத்துவ பொது நூலகத்திற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட புத்தக மெய்மையாய்வின் போது அகற்றப்பட வேண்டியது என | சபையினால் அதற்குரிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அகற்றப்பட வேண்டிய புத்தகங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| இனங்காணப்பட்ட 2007 முதல் 2017 வருடங்கள் வரையான பெறுமதி ரூபா 27,301 ஆன 236 புத்தகங்கள், 2018 ஆம் ஆண்டில் பெறுமதி ரூபா 12,112 ஆன 110 புத்தகங்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டில் பெறுமதி 18,405 ஆன 191 புத்தகங்களும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 57,818 பெறுமதியான 537 புத்தகங்களை அகற்றுவதற்கு 2020 செப்தெம்பர் 11 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | எடுத்தல் வேண்டும். |